## மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## கும்முடிப்பூண்டி

| | |
|---|---|
| வழக்கு எண். CC 115 / 2022 | RPF கும்மிடிப்பூண்டி நிலையம் |

| | | |
|---|---|---|
| பெயர் : அங்கத்குமார் | அ.சா. 1 | நாள் : 27.06.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 என்பவரின் வாக்குமூலம் 1969ஆம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.S.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அங்கத்குமார் | தாலுக்கா | : | |
| தந்தை பெயர் | : | இங்கல்பாஸ்வான் | தொழில் | : | ஆய்வாளர், தன்வார், ஜார்கண்ட் |
| கிராமம் | : | | வயது | : | 40 |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் 355 B.N.S.S. ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது இரயில்வே பாதுகாப்பு படை தன்வார் கோட்டத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2017ம் ஆண்டு கும்முடிப்பூண்டி நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது எனக்கு கிடைத்த நம்பதகுந்த தகவலின் பேரில் எண். 524 முத்துமாரியம்மன் இரும்பு கடையில் செல்லம்மாள் கோவில் தெரு,அத்திப்பட்டு புதுநகர் என்ற விலாசத்திலுள்ள கடையை சோதனை செய்ய 01.02.2017 அன்று ஒரு சோதனை கட்டளை பெற்றேன். **(சோதனை கட்டளை அதசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அன்றைய தினமே CIB ஆய்வாளர் முத்துபாண்டி மற்றும் சிப்பந்திகளுடன் மேற்கூறிய விலாசத்திலுள்ள கடைக்கு சென்றோம். கடையில் கடைக்காரரர் பூபதி இருந்தார். சோதனை கட்டளையை அவரிடம் காட்டி கடையை எனது சகாக்கள் மற்றும் 2 தனிநபர் சாட்சிகள் அய்யனார் மற்றும் கோபால் நாடார் முன்னிலையில் மாலை 4.15 முதல் 4.45 மணி வரை சோதனை செய்தோம். சோதனையின் போது கடையில் இருந்து இரயில்வேக்கு சொந்தமான 6 எண்ணிக்கை பிஷ் பிளேட்டுகள் மற்றும் 30 எண்ணிக்கை பேண்ட்ரோல் கிளிப்புகள் ஆகியவற்றை கண்டெடுத்தோம்,.அதை வைத்திருக்க கடைக்காரரிடம் எந்த அத்தாட்சியமும் இல்லை. அதை அவரை சட்ட விரோதமான முறையில் அடைந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கூறிய சாட்சிகளின்

முன்னிலையில் ஒரு சோதனை ஜாபிதா தயார் செய்து அந்த பொருட்களை கைப்பற்றினேன். **(சோதனை ஜாபிதா அதசா.ஆ.2 ஆகவும், கடையில் இருந்து கைப்பற்றப்பட்ட 6 எண்ணிக்கை பிஷ் பிளேட்டுகள் சா.பொ.1 ஆகவும், 30 எண்ணிக்கை பேண்ட்ரோல் கிளிப்புகள் சா.பொ.2 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது).** எதிரி தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகளின் முன்னிலையில் பதிவு செய்தேன். எதிரி இரயில்வே பொருட்களை அடையாளம் தெரியாத நபரிடம் வாங்கியதாக ஒப்பு கொண்டார். **(எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் அதசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரியை கைது செய்து நிலையம் அழைத்து வந்து எதிரி மீது நிலைய குற்ற எண். 4/2017 பிரிவு 3ஏ (RP(UP) Actன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். எதிரி மற்றும்வ ழக்கு சொத்துக்களை கனம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினேன். **(படிவம் 95 அதசாஆ4 ஆகவும், சம்பவ அறிக்கை அதசாஆ5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கின் கூடுதல் விசாரணையை நான் மேற்கொண்டேன். ஆய்வாளர் முத்துப்பாண்டி சாட்சிகள் அய்யனார், தலைமை காவலர் இளஞ்செழியன், காவலர் தயாளன், தனிநபர் சாட்சிகள் அய்யனார், கோபால் நாடார், தலைமை காவலர் பார்க்கியஜோஸ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்களை தனிதனியாக பதிவு செய்தேன். **(ஆய்வாளர் முத்துப்பாண்டி வாக்குமூலம் அதசாஆ6 ஆகவும், தலைமை காவலர் இளஞ்செழியன் வாக்குமூலம் அதசாஆ7 ஆகவும், காவலர் தயாளன் வாக்குமூலம் அதசாஆ8 ஆகவும் , சாட்சிகள் அய்யனார் வாக்குமூலம் அதசாஆ9 ஆகவும், கோபால் நாடார் வாக்குமூலம் அதசாஆ 10 ஆகவும், தலைமை காவலர் பார்க்கியஜோஸ் வாக்குமூலம் அதசாஆ11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** அழைப்பின் பேரில் 07.02.2017அன்று இளநிலை பொறியாளர் பால சுப்பிரமணி நிலையம் வந்து சான்று பொருட்களை ஆய்வு செய்து அவை இரயில்வேக்கு சொந்தமானது என்று சான்று வழங்கினார். **(சான்று அதசாஆ12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(பாலசுப்ரமணியம் வாக்குமூலம் அதசாஆ13 ஆக குறியீடு செய்யப்படுகிறது),** சோதனை செய்த கடையின் உரிமம் சம்பந்தமாக கிராம நிர்வாக உதவியாளரிடம் இருந்து சான்று பெற்றேன். **(சான்று அதசாஆ14ஆக குறியீடு செய்யப்படுகிறது).** சோதனை செய்த கடையில் பயன்படுத்திய எடை மற்றும் தராசு சம்பந்தமாக முத்திரை ஆய்வாளரிடமிருந்து சான்று பெற்றேன். (சான்று **அதசாஆ15 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது).** கடையின் உரிமையாளர் சந்திரனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். (சந்திரன் வாக்குமூலம் **அதசாஆ16 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கு சொத்துக்கள் காணாமல் போனது சம்பந்தமாக முதுநிலை பகுதி பொறியாளர் களவறிக்கை வழங்கினார் (அந்த களவறிக்கை **அதசாஆ17 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கின் விசாரணையில் எதிரி சட்ட விரோதமாக இரயில்வே பொருட்களை வைத்திருந்தது தெரியவந்தது. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட இரயில்வே பொருட்களின் மதிப்பு ரூ.7500/- ஆகும். விசாரணை முடிவுகள் எதிரி மீது கனம் நீதிமன்றத்தில் பிரிவு 3ஏ (RP(UP) Actன் கீழ் குற்ற முறையீடு தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

ஓம்/- அங்கத்குமார்.

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

R. Senthil Kumar, M.A., B.L.,
Digitally signed by R. Senthil Kumar, M.A., B.L.,
Date: 2025.06.27 13:30:22 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி